IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 94/2022

Deposition of Witness : PW 1

Name : தேவிகா (வயது – 65)

Father's Name /W/o : த/பெ கோவிந்தாச்சாரி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : அரக்கோணம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 25.11.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் தாவா சொத்தில் வடக்கு பகுதியின் அளவு 15 3/4க்கு 80 அடி என் அண்ணன் முதலில் 27.07.2001 தேதியில் யாருக்கு விற்றார் என்றால் சீனிவாசன் , ஜகதீசன் மற்றும் சேகர் ஆகியோருக்கு விற்றார். சீனிவாசனுக்கு கிரையம் கொடுத்த சொத்தில் தெற்கு பக்கம் உள்ள சுவர் உள்பட கொடுத்தாரா என்றால் ஆம். கிரையம் கொடுத்த சொத்தில் வடக்கு பக்கம் உள்ள சுவர் சீனிவாசன் என்பவருக்கு கிரையம் கொடுத்தரா என்றால் ஆம். வா.சா.ஆ – 4 சீனிவாசனுக்கு கிரையம் கொடுத்த பத்திரமா என்றால் ஆம்.

2. சீனிவாசன் வகையறாவிடமிருந்து தான் வடக்கு மற்றும் தெற்கு பக்கம் உள்ள சுவர் உள்பட தான் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ –5 சீனிவாசன் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். என் அண்ணன் சீனிவாசனுக்கு கிரையம் கொடுத்த சொத்து குறித்து எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். பிரச்சினை வருமா என்று நான் என் அண்ணனிடம் கேட்டதற்கு இல்லை என்று தெரிவித்தார்.

3. வா.சா.ஆ – 4 ஆவணத்தில் சகல உரிமைகளோடு ஆண்டு அனுபவித்து கொள்ள வேண்டியது என்று என் அண்ணன் சீனிவாசன் வகையறாவிற்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். சீனிவாசன் வகையறாவிடமிருந்து பிரதிவாதி கிரையம் பெற்றதால் அவருக்கும் அவர் வாங்கிய சொத்தில் சகல உரிமைகளும் உண்டு என்றால் சரியல்ல. நான் வசிக்கும் A,B,E,F வீட்டின் கழிவறை வீட்டிற்கு பின் பக்கம் தான் உள்ளதா என்றால் முழு வீட்டிற்கு பின் பக்கம் உள்ளது.

4. என் வீட்டிற்கு கிழுக்கு பக்கம்(பின் புறம்) தான் முனிசிபல் கால்வாய் சந்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி கால்வாய் வழியாக தான் கழிவுநீர் செல்கிறதா என்றால் முன்பக்கம் செல்கிறது. 5 வருடத்திற்கு முன் பாதாள சாக்கடை கட்டும்போது அதில் இணைத்துவிட்டேனா என்றால் நான் மேல்தளத்தில் உள்ளேன் அதற்கு முன் பக்கம் தான் கழிவு நீர் செல்லும். அடித்தளத்திற்கான கழிவுநீர் எங்கு செல்கிறது என்று எனக்கு தெரியாது. மேல்புறம் கழிவுநீர் முன்பக்கமாக எப்போது மாற்றினோம் என்றால் ஞாபகமில்லை. நான் தான் மேற்படி கழிவுநீரை வீட்டிற்கு முன்பக்கம் மாற்றினேன் என்றால் ஆம்.

5. பிரதிவாதியின் வீட்டை இடித்தால் கழிவுநீர் செல்லும் கால்வாய் பாதிக்காது என்றால் சரியல்ல. தாவா வரைபடத்தில் E,F என்று உள்ள பகுதியில் உள்ள சுவர் தரையில் இருந்து தளம் வரை உள்ளது என்றால் சரிதான். மேற்படி சுவர் முதல் மாடியில் இருந்து 2 ஆம் மாடி தளம் வரை உள்ளது என்றால் ஆம். மேற்படி சுவரை என் தாவாவில் காண்பிக்காமல் மறைத்துள்ளேன் என்றால் E,F என்று சுவர் காண்பித்துள்ளது. பிரதிவாதி 2020 ஆம் ஆண்டில் என்னிடம் அவர் வீட்டை இடிக்க போவதாக தெரிவித்துள்ளாரா என்றால் ஞாபகமில்லை.

6. மேற்படி எனக்கு வருடம் ஞாபகமில்லை ஆனார் பிரதிவாதி என்னிடம் வீட்டை இடிக்கபோவதாக தெரிவித்தார் என்றால் தெரிவித்திருக்கலாம். பிரதிவாதி வீட்டை இடிக்கபோவதாக என்னிடம்

தெரிவித்தபோது 6 மாதம் கால அவகாசம் கேட்டேனா என்றால் இல்லை. நான் கண் அறுவை சிகிச்சை செய்தேனா என்றால் செய்தேன். மேற்படி கண் அறுவை சிகிச்சை எந்த வருடத்தில் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் கண் அறுவை சிகிச்சை செய்துள்ளேன் என்பதால் தற்போது வீட்டை இடிக்க வேண்டாம் என்று பிரதிவாதியிடம் 6 மாதம் கால அவகாசம் கேட்டேனா என்றால் இல்லை. முழுவதும் பொய். மீண்டும் 2021 ஆம் ஆண்டில் வீட்டை இடிப்பதற்கு என்னிடம் கேட்டேனா என்றால் ஆண்டு ஞாபகமில்லை. அவர் எனக்கு தெரிவித்திருக்கலாம் நாங்கள் ஆட்சேபணை தெரிவித்தோம்.

7. பிரதிவாதி வளர்புரம் கிராமத்தில் வசிக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் சொல்லி எனக்கு தெரியும். பிரதிவாதி லுங்கி வியாபாரம் செய்து வருகிறாரா என்றால் தெரியாது. பிரதிவாதி வாங்கிய வீடு பாழடைந்துவிட்டது மற்றும் செல் அரித்து விட்டது என்பதால் தான் என்னிடம் வீட்டை இடிப்பதற்கு கேட்டார் என்றால் மேற்படி விபரங்களை எனக்கு தெரிவிக்கவில்லை வீட்டை இடிக்கபோவதாக மட்டும தான் தெரிவித்தார். பிரதிவாதி என்னிடம் இடிக்க போவதாக பலமுறை தெரிவித்ததற்கு நான் இடிக்க கூடாது என்று ஆட்சேபணை தெரிவித்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி அவருடைய வீட்டை இடித்துவிட்டு கீழ் தளத்தில் லுங்கி வியாபாரமும் மேல் தளத்தில் குடியிருக்க போவதாக என்னிடம் தெரிவித்தார் என்றால் இல்லை. என்னிடம் தெரிவிக்கவில்லை.

8. பிரதிவாதி வீட்டை இடிப்பதற்கு அரக்கோணம் நகராட்சியிடம் அனுமதிபெற்றள்ளார் என்றால் நான் விசாரரித்தபோது அனுமதி கொடுக்கவில்லை என்றும் என் அனுமதி இல்லாமல் வீட்டை இடிக்கமுடியாது என்று தெரிவித்தார்கள். நான் அரக்கோணம் நகராட்சியில் விசாரிக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. 09.08.2022 தேதியில் பிரதிவாதி E,F சுவர் இடித்து என் வீட்டின் பக்கம் சுவர் எழுப்பி தருவதாக தெரிவித்தாரா என்றால் இல்லை. அடுத்த நாள் அரக்கோணம் காவல் நிலையத்தில் பெய்யான புகார் அளித்தள்னே் என்றால் இல்லை.

அவர்கள் ஆட்களுடன் வந்து இடிக்க முயற்சி செய்தார்கள். மேற்படி விபரம் உண்மை இல்லை நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

9. காவல் நிலையத்தில் புகார் அளித்தற்கு காவல் அதிகாரி வழக்கு சொத்தை வந்து பார்வையிட்டாரா என்றால் தெரியாது. காவல் நிலையத்தில் இரண்டு தரப்பினரை அழைத்து விசாரித்தார்கள் என்றால் ஆம். பிரதிவாதி அவர் வீட்டை தான் இடிக்கபோவதாக கூறுகிறார் நான் அனுசரித்து போகுமாறு அறிவுரை கூறினார்களா என்றால் இல்லை. பிரதிவாதி வீட்டை இடிக்ககூடாது என்று அவருக்கு அறிவுரை கூறினார். மேற்படி நான் சாட்சியம் அளித்த படி பிரதிவாதிக்கு அறிவுரை கூறவில்லை என்றாலும் எனக்கு தான் அறிவுரை கூறினார் என்றால் சரியல்ல.

10. அதன் பிறகு மீண்டும் எப்போது காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் 24.08.2022 தேதியில் புகார் அளித்தேன். இப்போதும் காவல் நிலையத்தில் எனக்கு தான் அறிவுரை கூறினார்கள் என்றால் இல்லை. அரக்கோணம் உதவி கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தேனா என்றால் ஆம். பிரதிவாதிகள் தொடர்ந்து எனக்கு இம்சை கொடுத்தார்கள், காவல் நிலையத்தில் அறிவுரை மட்டும் தான் வழங்கினார்கள் நடவடிக்கை எடுக்கவில்லை அதனால் அளித்தேன். உதவி கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அறிவுரை கூறினார்களா என்றால் சிவில் DISPUTE என்பதால் நீதிமன்றத்தை அணுகுமாறு சொன்னார்கள்.

11. பிரதிவாதி உண்மையில் தவறு செய்திருந்தால் அவர் மீது நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் சிவில் DISPUTE என்பதால் அறிவுரை மட்டும் கொடுத்தார்கள். பிரதிவாதி வீட்டை இடிக்காத காரணத்தினால் தான் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னை பலமுறை அணுகியும் அவர் சுவர் கட்டித்தருவதாக தெரிவித்தும் நான் தான் சம்மதிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் வீட்டை வாங்கியதில் இருந்தே அவரை எதிரியாக தான் பார்க்கிறேன் என்றால் இல்லை. பிரதிவாதி வாங்கிய சொத்திற்கு முழு உரிமையுடன் அனுபவிக்க அவருக்கு

உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

12. என் வீட்டிற்கு எந்தவொரு பாதிப்பும் இல்லாமல் பிரதிவாதி C,D,E,F என்று குறிப்பிட்டுள்ள வீட்டை அவர் இடித்து புதிதாக கட்டிக்கொள்ள அவருக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் வீட்டை இடித்து புதியதாக கட்டக்கூடாது என்பதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. E,F பகுதியில் வாதி வீட்டு பக்கம் சுவர் கட்டிதருவதாக பிரதிவாதி எப்போது சொன்னார் என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு சொன்னார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பிரதிவாதி எனக்கு தெரிவித்தார் என்றாலும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. E,F பகுதியில் புதியதாக சுவர் கட்டிகொடுத்து பிரதிவாதி வீட்டை இடிப்பதற்கு சம்மதமா என்றால் என் வீட்டிற்கு பாதிப்பு ஏற்படும். நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**